KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: **10.63300/kijts603112026.32**

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

குமரேச சதகத்தில் அறச்சிந்தனைகள்

Moral thoughts in Kumaresa Sathakam

G. Sakthi[1,*], Dr. KT. Murugesan[2]

[1] Research Scholar, Department of Tamil, Ganesar College of Arts and Sience, (Affiliated to Bharathidasan University) , Melaisivapuri- 622403

[2] Assistant Professor and Research advisor, Department of Tamil, Ganesar College of Arts and Sience, (Affiliated to Bharathidasan University) , Melaisivapuri- 622403

***Corresponding author:** G. Sakthi, sakthikavini@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 20 October 2026
Revised: 22 October 2026
Accepted: 25 October 2026

Article ID
KIJTS-2026-0007

Peer review
Double-blind peer review

Keywords
Ethics
Morality
Virtue
Vice
Happiness
Sorrow.

ABSTRACT

The 'Sathagam' (Sathaka) literature is a genre composed of one hundred verses. Through these literary works, it is evident that this genre provides an opportunity to elaborate on ideas across various themes. One such work, the Kumaresa Sathakam, was composed by Gurupada Dasan in praise of Lord Murugan, who resides in Thiruppullavayal. This book is rich in thoughts concerning ethics and the way of life. The ethical teachings found in various didactic literature (Neethi Noolgal) are explained here simply and in a manner applicable to daily life. In particular, the book subtly illustrates what should be accepted and what should be avoided in life. The Kumaresa Sathakam records ethical thoughts across individual ethics, family ethics, societal ethics, and universal ethics, in a way that is easily understood and practical for everyone to adopt in their lives.

How to cite this article: G. Sakthi, & Dr. KT. Murugesan (2026). குமரேச சதகத்தில் அறச்சிந்தனைகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 419–429. https://doi.org/10.63300/kijts603112026.31
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

குமரேச சதகத்தில் அறச்சிந்தனைகள்

க. சக்தி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலைச்சிவபுரி - 622403

முனைவர் கதி. முருகேசன், உதவிப் பேராசிரியர் (ம) ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலைச்சிவபுரி - 622403.

ஆய்வுச் சுருக்கம்

சதக இலக்கியம் நூறு பாக்களைக் கொண்டு படைக்கப்படும் இலக்கிய வகை. பல்வேறு பொருண்மைகளில் கருத்துக்களை விரிவாகப் பாடுதற்கு இவ்விலக்கியம் வாய்ப்பளிப்பதை இலக்கியங்களின் வழி அறியலாம். சதக இலக்கியங்களுள் ஒன்றான குமரேச சதகம் திருப்புல்வயலில் கோயில் கொண்டிருக்கும் முருகக்கடவுள் மீது குருபாத தாசன் பாடியதாகும். இந்நூலில் வாழ்வியல் மற்றும் அறம் தொடர்பான சிந்தனைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. நீதி நூல்கள் கூறிய அறங்கள் பலவும் எளிமையாகவும் வாழ்வில் பயன் கொள்ளும் முறையிலும் விவரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வாழ்வில் ஏற்கத்தக்கவற்றையும் விலக்கத்தக்கவற்றையும் நூல் நுட்பமாக விளக்கியுள்ளது. அனைவருக்கும் புரியும் வண்ணமும் வாழ்வில் ஏற்றுப் பயன்படுத்தும் வண்ணமும் தனிமனித அறம், குடும்ப அறம், சமுதாய அறம், உலகளாவிய அறம் என்னும் நிலைகளில் குமரேச சதகம் அறச்ச சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளது.

குறிப்புச் சொற்கள்

அறம், நீதி, நன்மை, தீமை, இன்பம், துன்பம்.

முன்னுரை

சதகம் தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. விரும்பிய பொருள்களைத் தடையின்றிப் பாட இடம் கொடுக்கும் இவ்விலக்கியம் நூறு பாடல்களைக் கொண்டு விருத்த யாப்பில் பாடப்படுவதாகும். சதக நூல்களில் முதல் நூலாக அமைவது ஆறைக்கிழார் பாடிய கார் மண்டல சதகம் என்னும் நூலாகும். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தில் அமையும் திருச்சதகம் நூறு பாக்களைக் கொண்டிருப்பினும் தனிநூல் வகையில் கார்மண்டல சதகம் முதல் நூலாக அமைகிறது. சதக இலக்கிய நூல்களுள் ஒன்றாக அமையும் குமரேச சதகம் திருப்புல் வயலில் கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமான் மீது குருபாத தாசன் பாடியதாகும். இந்நூல் வாழ்வில் ஏற்றுப் போற்ற வேண்டிய அறச்செயல்களையும் விலக்க வேண்டிய தீய செயல்களையும் எடுத்துரைக்கிறது. வாழ்வியல் பயன்பாட்டு நோக்கில் இந்நூல் மிகுதியான அறச்சிந்தனைகளைக் கொண்டு விளங்குகிறது. நூலில் இடம்பெறும் அறச் சிந்தனைகளைப் பொருளாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

அடக்கம்

மனிதன் மன அடக்கமுடன் அறச் சிந்தனையுடன் வாழ வேண்டியவன். வள்ளுவர், "அடக்கம் என்னும் பண்பு ஒருவனை நன்னிலையில் உய்க்கும் என்றும் அடக்கமின்மை இருள் உலகில் சேர்க்கும்" (குறள்.) என்றும் குறிப்பிடுவர். குமரேச சதகம் மனிதன் தன்னளவில் அடக்கம் கொண்டு அறக்கோட்பாட்டுடன் வாழ்கின்ற போது சமூகத்தில் நடைபெறும் அறமற்ற செயல்களையும் அடக்குதல் வேண்டும் என்பதைப் பதிவு செய்துள்ளது. தீயவர்கள், தீய நினைவுடைய மனைவி, பகைவர்கள், தீயவழியில் நடப்பவர்கள், தீய தொழில் செய்யும் பெண்களின் ஆரவாரம், அடிமைப்பணி செய்வோர்,

கள்ளக்குணம் உடையோர், அடக்கம் இல்லாத பெண் மக்களுக்குத் துன்பம் விளைவிக்கும் போர் என்னும் இவை சமூகத்திற்குத் துன்பம் விளைவிக்கும் தன்மையவை என்பதால் அடக்குதல் வேண்டும் என்பதைப் பாடல் பதிவு செய்துள்ளது.

அக்கினியை வாய்முந்து துர்ச்சனரை வஞ்சமனை

யாளைவளர் பயிர்கொள் களையை

அஞ்சா விரோதிகளை அநியாயம் உடையோரை

அகிர்த்தியம் பெண்களார்ப்பைக்

கைக்கினிய தொழிலாளியைக் கொண்ட அடிமையைக்

களவுசெய் யுந்திருடரைக்

கருதிய விசாரத்தை அடக்கம்இல் பலிசையைக்

கடிதான கோபந்தனை

மெய்க்கினி தலாப்பிணியை அவையுதா சீனத்தை

வினைமூண் டிடுஞ்சண்டையை

விடமேறு கோரத்தை யன்றடக் குவதலால்

மிஞ்சவிட லாகாதுகாண்"(குமரேச சதகம் - 12)

எதிர்கொள்ள எளிமையானவை

பெருமைக்குணம் உடையவர்கள் எப்போதும் எதிர்வரும் அரிதான செயல்களை எளிமையாக முடிக்கும் பண்பு நலனும் மன உறுதியும் கொண்டவர்களாவர். அவ்வாறே அவர்கள் கொண்ட அற மனம் மற்றும் கட்டுப்பாட்டு உணர்வின் காரணமாக எத்தகைய அரிதான செயலையும் எளிமையாக எதிர்கொள்ளும் உறுதி படைத்தவர்களாவர் என்பதை இலக்கியம், "கொடுக்கும் குணம் படைத்த ஈகையாளர்கள் இப்பொருள் இன்ன தகுதி உடையது என்று கருதாமல் அரிதான பொருள்களையும் கொடுக்கும் குணமுடையவர்கள்; தன் உயிரைப் பெரிதாக நினைக்காத தன் உயிருக்கு அச்சம் கொள்ளாத ஆளுமைப் பண்புமிக்க வீரன் ஒருவன் எதிர்வரும் படையைக் கண்டு அச்சம் கொள்ளாமல் அதனை எளிதெனக் கருதி எதிர்கொள்வான்; தன்னலம் கருதாதவர்களும் நடுநிலையாளர்களுமாக விளங்கும் சான்றோர் கீழ்மக்கள் தரும் பொருள் எத்தகைய உயர்வு உடையது எனினும் அதனை ஏற்காமல் துரும்பாகவே கருதுவார்கள்; இறைவனை வழிபட்டு மீண்டும் பூவுலகில் பிறக்கக் கூடாது என்னும் எண்ணம் கொண்டவர்கள் வீடுபேற்று இன்பத்திற்குத் தடையாக இருக்கும் பெண்ணின்பத்தைப் பயனற்றதாகக் கருதி ஒதுக்குவார்கள்; ஆசையை நீக்கி வாழும் மனம் உடையவர்களுக்கு மன்னனும் உதாரணமானவனாவான்" (மேலது.13) என்றவாறு பதிவு செய்துள்ளது. எனவே, தன்னளவில் அறக்கோட்பாடும் ஆளுமையும் நன்மை செய்யும்

எண்ணமும் கொண்டவர்களுக்கு எதுவும் எளிதாகவே தோன்றும் என்பதை இலக்கியம் ஆழமான நோக்கில் வெளிப்படுத்துகிறது.

பயன் தருவன

உலகில் பலன் எதிர்பாராமல் மக்களுக்கு இயற்கை நன்மை செய்கிறது. நல்ல குணம் படைத்தவர்கள் தம் இரக்கக் குணத்தின் காரணமாக அனைவருக்கும் தன்னளவில் நன்மைகளைச் செய்கின்றனர். அனைவருக்கும் இயற்கை நல்லனவற்றை வழங்குவதும் மனிதன் நன்மையை செய்தலும் மானுடத்தை உயர்த்தும் பண்புகளாக அமைகின்றன. குமரேச சதகம், "வான் தரும் மழை; நாடாளும் திறனும் நல்ல குணமும் உடைய மன்னன்; ஊர்ப் பொது இடத்தில் வளர்ந்திருக்கும் மரத்தின் நிழல்; வேளாளர்கள் விளைவிக்கும் பயிர்; பொது இடத்தில் நிற்கும் கனிகள் நிறைந்த மரம்; தண்ணீர் பந்தல்; காவிரியின் வழியில் பெறப்படும் உணவும் நீரூற்றும்; சூரிய சந்திர ஒளி; தென்றல் காற்று; நல்லவர்களின் செல்வம்" (மேலது. 16) என்னும் இவை மக்களுள் பாகுபாடு கருதாமல் அனைவருக்கும் நன்மை விளைவிப்பனவாகும். வான் மேகம், பொது இடத்தில் இருக்கும் மரம், பழம் கொண்ட மரம், நடுநிலையான மன்னன், நல்லவர்களின் செல்வம், இருசுடர்களின் ஒளி என்னும் இவற்றின் பின் தன்னலம் கருதாமல் பிறருக்கு வழங்கும் உயரிய பண்பு இயற்கையிலேயே அமைந்திருப்பதை இலக்கியம் பதிவு செய்துள்ளது. இதன் வழி ஆசிரியர் தன்னலம் கருதாமல் பிறர் நலம் பேணும் வாழ்வே வாழ்வு என்பதை அதன் மூலம் மனிதன் தழைக்கும் அறம் பெருகும் என்பதை மானுடத்திற்கு விளக்கியுள்ளார்.

மாறாத குணம்

உலகில் தோன்றிய பொருட்கள் முதலாக உயிரினங்கள் ஈறாக ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட குணம் உண்டு. அக்குணம் மாறாமல் அதனுடன் உறையும் இயல்புடையது என்பதை குணம் மாறாதவை என்னும் பொருளில் குமரேச சதகம் குறிப்பிடுகிறது. சான்றோர்களின் சிறப்பைக் கூற வந்த ஆசிரியர் அவர்கள் வாழ்ந்தாலும் இறந்தாலும் புகழுடையவர்களே என்னும் செய்தியை விளக்க பொன், சந்தனம், சங்கு, பால், மாணிக்கம் என்னும் இவற்றை எடுத்துக் கொண்டு சான்றோர்களின் புகழுக்கு அணி செய்திருக்கிறார். இதனை, "நெருப்பிலிட்டு சுட்டபோதும் தங்கம் தன் நிறத்தில் மாறாமல் ஒளிர்கிறது; சந்தனம் தேய்ந்தாலும் தன் மணத்தில் குன்றாமல் மணம் தருகிறது; நெருப்பிலிட்டுச் சுட்ட போதும் சங்கு தன் வெண்மை நிறத்தை இழப்பதில்லை; பால் கொதித்துத் தன் அளவில் குறைந்த போதும் சுவை குறைவதில்லை; மாணிக்கக் கல் சாணை பிடிக்கப்பட்டாலும் ஒளி குறைதல் இல்லை; அவ்வாறே சான்றோர்களும் புவியில் வாழும் காலத்தில் புகழுடன் விளங்கி இறந்த பின்னும் புகழோடு விளங்குவர்"(மேலது.17) என்னும் சிந்தனையால் அறியலாம்.

தீய குணம் தீச்செயல்களால் நரகம் வீழ்தல்

உலகம் நன்மை, தீமை என்னும் இரண்டன் கலப்பாகும். நன்மை, தீமை என்னும் இவற்றுள் மக்கள் சமுதாயம் தீமைகளைப் புறம் தள்ளி நல்லனவற்றை ஏற்று வாழ வேண்டும் என்பதை அறநூல்கள் தலையாயதாக வலியுறுத்தியுள்ளன. மனிதன் வாழும் காலத்தில் தன்னால் இயன்றவரை பிறருக்கு நன்மை செய்தல் வேண்டும். எவ்வகையிலும் பிறர் வாழ்வை அழிக்கும் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யும் எண்ணம் சிறிதும் கூடாது. அவ்வாறு செய்தால் நரக உலகம் கிட்டும் என்பதை குமரேச சதகம் குறிப்பிடுகிறது. இதனை, "போர்க்களத்தில் இரு படைகளின் இடையே போர் நடைபெறும் போது மன்னனைப் போர்க்களத்தில் தனியே விடுத்துத் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள போர்க்களத்தை விட்டுச் செல்லும் படை வீரர்கள்; ஆசிரியர் கூறிய கட்டளையை ஏற்று அதன்வழிச் செயலை நிறைவேற்ற மறந்தவர்கள்; பிற உயிர்களைக் கொன்றவர்கள்; பெற்றோர்களைப் பழத்துரைத்தவர்கள்; பிறர் மனைவி மீது மோகம் கொண்டு திரிபவர்கள்; உணவிட்டவர்களுக்குத் தீமை நினைப்பவர்கள்; மன்னனைச் சூழ்ச்சியால் வென்ற அமைச்சர்கள்; திருக்கோயில்களைப் பழி தூற்றியவர்கள்; நட்புக்குத் தீங்கு விளைவித்தவர்கள்; துறவிகளை இகழ்ந்தவர்கள்; நன்றி மறந்தவர்கள்; வழக்கில் ஒரு தலையாகத் தீர்ப்புக் கூறியவர்கள்; சிவனடியார்களைத் தீய சொல் கூறித் தூற்றியவர்கள்; பொய் கூறி வாழ்பவர்கள்; அடைக்கலமாகக் கொடுத்த பொருளை அபகரித்தவர்கள்" (மேலது. 18) என்னும் சிந்தனையால் அறியலாம். இதனால் வாழ்வில் அறம் தவறி நடப்பவர்கள் துன்புறுவதுடன் நரக உலகில் புகுந்து துன்புறுவர் என்பதை நூல் வாழ்வியல் அறமாகப் பதிவு செய்துள்ளது.

விலக்கத்தக்க பகை

மண்ணுலகில் வாழ்கின்ற மக்கள் தாம் அறவழியில் வாழ்ந்து பிறருக்கும் அறம் செய்து வாழ்வதே வாழ்க்கை. அவ்வாழ்வில் அமைதி, வளம், அறம் அனைத்தும் பெருகும். ஆனால் சமுதாய வாழ்வில் கொள்ளும் பழக்கம் சில வேளைகளில் மாறான விளைவைத் தோற்றுவிப்பதுண்டு. அற மனம் நிறைந்தவர்களாக இருந்த போதும் தீ நட்பு, தவறான பழக்கம் உள்ளவர்களுடனான தொடர்பு முதலியவை தீராத துன்பத்தைத் தரும் என்று இலக்கியம் குறிப்பிடுகிறது. அதனை விலக்க வேண்டியனவாகப் பகை என்னும் தலைப்பில் பதிவு செய்துள்ளது. "தவம் செய்யும் துறவிகள்; கள்வர்; தீயவர்கள்; வஞ்சக எண்ணம் கொண்டவர்கள்; கொலைகாரர்கள்; காலத்தை கணித்து கூறுபவன்; மக்கள் கூட்டம்; மருத்துவர்; ஆசிரியன்; கவிஞன்; உறவுகள்; அமைச்சன் ஆகியோரிடம் பகைகொள்ளக் கூடாது.

பயன் தராதவை

பயனற்ற செயல்கள் செய்வதாலும் பயனற்றவர்களைச் சார்ந்திருப்பதாலும் வாழ்வில் பயன் விளைவதற்கு மாறாகத் துன்பம் நிகழும் என்பதை குமரேச சதகம்,

தருணத்தில் உதவிசெய் யாதநட் பாளர்பின்

தந்தென தராமல் என்ன

தராதரம் அறிந்துமுறை செய்யாத மன்னரைச்

சார்ந்தென்ன நீங்கலென்ன

பெருமையுடன் ஆண்மையில் லாதஒரு பிள்ளையைப்

பெற்றென பெறாமலென்ன

பிரியமாய் உள்ளன்பில் லாதவர்கள்நேசம்

பிடித்தென விடிக்கில் என்ன

தெருளாக மானம்இல் லாதவவொரு சீவனம்

செய்தென செயாமல் என்ன

தேகியென வருபவர்க் கீயாத செல்வம்

சிறந்தென முறிந்தும்என்ன

மருவிளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு

வந்தென்ன வராமலென்ன (மேலது. 26)

இப்பாடலில், நண்பர்கள் தேவையான காலத்தில் துணைக்கு வராமல் காலம் கடந்து வருதல்; நடுநிலை இல்லாத மன்னனைச் சார்ந்திருத்தல்; தகுதியும் வீரமும் இல்லாத ஆண் குழந்தையைப் பெறுதல்; மனம் பொருந்திய நட்பு இல்லாதவர்களின் நட்பு; அறிவும் மானமும் இல்லாமல் நடத்துகின்ற வாழ்க்கை; வறுமையில் வாடுபவர்களுக்குக் கொடுத்து உதவாத செல்வம்; இன்பம் கொள்ள வேண்டிய காலத்தில் கிடைக்காத பெண் என்னும் இவை அனைத்தும் பயனற்றவை என்னும் செய்தி குறிப்பிடப்படுகிறது. சார்ந்திருக்கும் ஒன்று பயன் தரல் வேண்டும் இன்றேல் அதனை விட்டு ஒதுங்குதல் துன்பத்திலிருந்து வெளிவருவதற்கான வழியாகும் என்பதைப் பாடல் விளக்குகிறது.

வீணானவர்கள்

மக்களாக பிறந்தவர்கள் பிறருக்கும் தனக்கும் பயனுடையவர்களாக வாழ வேண்டும். "நல்லது செய்தல் ஆற்றி ராயினும் / அல்லவை செய்தல் ஓம்புமின்" (புறம்.195) என்று புறநானூறு குறிப்பிடுகிறது. அறம் செய்து வாழ்கின்ற வாழ்க்கையும் பிறருக்குச் சிறிதும் துன்பம் செய்யாத வாழ்க்கையும் நல்வாழ்க்கை என்பதை அறநூல்கள் குறிப்பிடுகின்றன குமரேச சதகம் தற்பெருமை கொண்டவர்கள்; போருக்கு அச்சம் கொள்பவர்கள்; சான்றோர்கள் கூறும் அறிவுரையைக் கேளாதவர்கள்; நண்பர்களிடம் தன் குறைகளைக் கூறுபவர்கள்; பெற்றோர்களைத் துன்பத்தில் வாட விடுபவர்கள்; பெண்களின் சொல் கேட்டு அதன் வழி நடப்பவர்கள்; தன்னிடம் பொருளை வைத்துக் கொண்டு பிறரிடம் பொருள் கேட்டு அலைபவர்கள்; பொய்யான தீர்ப்புக் கூறுபவர்கள்;

உலகோர்களைப் பழிப்பவர்கள்; தன் இல்லாளிடம் பெற்ற இன்பத்தைப் பிறருக்குக் கூறுபவர்கள் ஆகியோர் பயனற்றவர்களாவர் என்று,

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர்

சமர்கண் டொளிக்கும்பதர்

தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர்தோழர்

தம்மோடு சலிக்கும் பதர்

பின்புகா ணாஇடம்தனிலே புறணிபல

பேசிக்களிக்கும் பதர்

பெற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர்

பெண்புத்தி கேட்கும் பதர்

பொன்பணம் இருக்கவே போயிரக் கின்றபதர்

பொய்ச் சாட்சி சொல்லும் பதர்

புவியோர் நடத்தையை இகழ்ந்தபதர் தன்மனைவி

புணர்தல்வெளி யாக்கும்பதர்

மண்புணரும் வேசையுடன் விபசரிக் கின்றபதர்

மனிதரில் பதரென்பார் காண் (மேலது. 28)

என்னும் பாடல் குறிப்பிடுகிறது. மேலும், "வறுமையான வாழ்வு வாழ்பவர்கள்; தீராத நோய் உடையவர்கள்; மாமனார் வீட்டில் நீண்ட நாட்கள் தங்கி இருப்பவர்கள்; அரசவையில் பிறர் மீது பழி கூறி வாழ்பவர்கள்; பல்லக்குச் சுமந்து வயிறு வளர்ப்பவர்கள்; மனைவிக்கு அச்சம் கொண்டு விருந்தினரை இகழ்ந்து அனுப்பியவர்கள்; நடக்காத ஒரு செயலுக்காக வழக்குத் தொடுத்து வாதாடுபவர்கள் என்னும் இவர்களை இருந்தும் இறந்தவர்களாகக் குறிப்பிடுகிறது (மேலது. 26). "தீயவர்களைத் திருத்த இயலாது" (மேலது. 39). வாழ்வில் நன்மைகள் நடைபெற நல்லவர்களுடன் உறவு கொள்ள வேண்டும் என்று கூறி அதற்கான சான்றுகளையும் பதிவு செய்திருக்கிறது. "சந்தன மரத்தை அடுத்து நின்ற பிற மரங்களும் சந்தன மரத்தின் மணத்தைத் தரும். மேரு மலையைச் சார்ந்த காக்கையும் பொன்வண்ணம் பெறும்; பாலுடன் நீர் கலந்தால் வேறுபாடின்றி வெண்ணிறமே விளங்கும்; படிகக் கற்களில் கோக்கப்பட்ட நூல் படிக்கத்தின் நிறம் பெறும்; பச்சை நிறக் கல்லை அணிந்தால் அதனைச் சார்ந்த பொருள்களும் கல் பின் நிறம் பெறும்; அவ்வாறே சான்றோருடன் நட்புக் கொண்டால் நல்ல குணம் வரப்பெறும்" (மேலது.43) குமரேச சதகம் கூறியுள்ள அறச்சிந்தனைகள் மனத்தில் உள்ள அழுக்குகளை அகற்றி மனிதனை நெறிப்படுத்தும் திறன் கொண்டவை. நல்ல மனம் பெறுதல் இயன்றவரை நன்மை செய்தல் என்பன வாழ்வின் அடிப்படை அறங்கள் என்பதை நூல் தனக்குள் கொண்டு சிறக்கிறது.

முடிவாக,

குமரேச சதகம் வாழ்வில் ஏற்றுப் போற்றத்தக்க அறங்கள் பலவற்றைத் தன்னுள் கொண்டுள்ளது. நல்லவர்களுடன் நட்பு கொள்ளல், தீயவற்றில் இருந்து விலகுதல், பயனுடையன செய்தல், பயனற்றவற்றை மேற்கொள்ளாதிருத்தல், சுய கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றை மனித மேம்பாட்டுக்கான அறங்களாக குமரேச சதகம் பதிவு செய்துள்ளது.

துணை நூல்கள்

References

கதிர் முருகு, குமரேச சதகம் மூலமும் உரையும், சென்னை, சாரதா பதிப்பகம், 2006

பரிமேலழகர், திருக்குறள், சென்னை, சாரதா பதிப்பகம், 2008.

புறநானூறு, சென்னை, சாரதா பதிப்பகம், 2010.